வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

## திருச்சி மண்டலம்,
## பொன்மலைப்பட்டி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை,
## பழூர் கிராமம்

## பொருளடக்கம்


| வ.எண் | செயல்பாடுகளின் விவரம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் | 02 |
| 2 | கிராமத்தின் விபரம் | 03 – 04 |
| 3 | கிராமத்தின் தொடக்க விழா அழைப்பிதழ் | 05 |
| 4 | கிராமத்தின் தொடக்க விழா | 06 |
| 5 | செயல்பாட்டு அறிக்கை | 07 |
| 6 | மனவளக்கலை யோகா பயிற்சி – உடற்பயிற்சி, தவம், காயகல்பம், பிரம்மஞானப் பயிற்சி/ அருள்நிதியர் பயிற்சி | 08 |
| 7 | ஆரம்ப மருத்துவ முகாம் | 09 |
| 8 | மறு பரிசோதனை முகாம் | 10 |
| 9 | மன நல ஆலோசனை முகாம் | 10 |
| 10 | சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் மரம் நடுதல் விழா | 10 |
| 11 | கர்ப்பிணி பெண்களுக்கான வாழ்த்து தவம் | 10 |
| 12 | கிராம மக்களின் அனுபவ உரை | 11 – 14 |
| 13 | நிறைவு விழா அழைப்பிதழ் | 15 |
| 14 | எதிர்கால திட்டங்கள் | 16 |
| 15 | வாழ்த்துரை | 16 |

தொடக்க விழா : 11.11.2018 நிறைவு விழா : 20.04.2019

## கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை எளிய மக்களும் ஆன்மீக அறிவைப் பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெற முடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஆழியார், அறிவுத்திருக்கோயில் அறங்காவலர், திரு.A.S.துரை ராம்குமார் அவர்களால் 140 வது கிராமமாக பழூர் கிராமத்தில் கிராமிய சேவைத் திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில 11.11.2018 ஆம் தேதியிலிருந்து 20.04.2019 ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பல சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்ற வாழ்வு
- குடும்ப அமைதி
- முதியோரை பாதுகாத்தல்
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- சமுதாய விழிப்புணர்வு
- மத நல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## தேர்வு செய்யப்பட்ட கிராமத்தின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1 | கிராமத்தின் பெயர் | பழூர் |
| 2 | மண்டலம் | திருச்சி |
| 3 | அறக்கட்டளை | பொன்மலைப்பட்டி |
| 4 | பஞ்சாயத்து/ஊராட்சி | அந்தநல்லூர் |
| 5 | மாவட்டம் | திருச்சிராபள்ளி |
| 6 | தாலுகா | ஶ்ரீரங்கம் |
| 7 | Executive Officer | - |
| 8 | பஞ்சாயத்து தலைவர்- சுயேட்சை/கட்சி | - |
| 9 | வார்டு உறுப்பினர் | - |
| 10 | மக்கள் தொகை | ஆ : 167 பெ : 179 கு: 57 மொ: 403 |
| 11 | வீடுகள் எண்ணிக்கை | 115 |
| 12 | காலனி பகுதி உள்ளதா? | இல்லை |
| 13 | அருகில் உள்ள பள்ளியின் பெயர், மாணவர்கள் எண்ணிக்கை | அரசு உயர்நிலைப்பள்ளி, முத்தரசநல்லூர் 250 மாணவர்கள் |
| 14 | primary Health Centre | இல்லை |
| 15 | துவக்க விழா நடைபெறவிருக்கும் இடம் | அரவாயி அம்மன் கோவில் திடல் |
| 16 | பயிற்சி நடத்தவிருக்கும் இடங்கள் | சமுதாய கூடம் |
| 17 | பயிற்சி நேரம் | முழுநேரம் |
| 18 | கிராமிய சேவைத்திட்ட இணை இயக்குனர் | பேரா.K.R.சண்முகம் 9443304901 krshanmugam955@gmail.com |
| 19 | கிராமிய சேவைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் (academy) | பேரா.G.பாலமுருகன் 9486014179, boojamithun@gmail.com |
| 20 | கிராமிய சேவைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் (Admin) | அ.நி.V.ரேவதி 8903638630, vsp@vethathiri.ac.in |
| 21 | மண்டல VSP துணைத்தலைவர், | Dr.R.புவனேஸ்வரி 9487486334 |
| 22 | அறக்கட்டளை VSP துணைத்தலைவர், | **பேரா.M.மாணிக்கம்** |
| 23 | கிராமிய சேவைத்திட்ட ஆசிரியர்கள் பெயர், SMART ID NUMBER | பேரா.K.ராஜபாண்டியன்,<br>து.பேரா.R.செந்தாமரை 2007733 |

| | | |
|---|---|---|
| 24 | கிராமத்தில் மனவளக்கலை அன்பர்கள், அருள்நிதியர்கள் உள்ளனரா? | இல்லை |
| 25 | மரம் நடுதல் | திரு.கார்த்திகேயன் |
| 26 | மருத்துவ முகாம் | R&D |
| 27 | Counselling - நடத்துபவர் பெயர் | M.K.ஜானகிராமன், சென்னை |
| 28 | மது ஒழிப்பு முகாம் - நடத்துபவர் பெயர் | Dr.நேரு |
| 29 | சுற்றுப்புற சுகாதாரம் | ஆசிரியர்கள் |
| 31 | மகளிர் மேம்பாடு | - |
| 32 | கிராமிய சேவைத்திட்ட துவக்க விழா தேதி | 11.11.2018 |
| 33 | கிராமிய சேவைத்திட்ட நிறைவு விழா தேதி | 20.04.2019 |
| 34 | புரவலர் பெயர், முகவரி, தொலைபேசி எண் | திரு.S.கார்த்திகேயன் |
| 35 | நிர்வாகக்குழு உறுப்பினர்கள், | 7 நபர்கள் |
| 36 | வளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் | 5 நபர்கள் |
| 37 | சேவைக்குழு உறுப்பினர்கள் | 9 நபர்கள் |

# தொடக்க விழா அழைப்பிதழ்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## நிகழ்ச்சி நிரல்

மாலை

5.45 மணி : கொடியேற்றம்

5.50 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

6.00 மணி : வரவேற்புரை : பேரா. **S.V. செல்வகுமார்** அவர்கள்,
தலைவர், பொன்மலைப்பட்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.

6.05 மணி : திட்ட அறிமுகவுரை : அருள்நிதி. **P. முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

6.10 மணி : முன்னிலையுரை :
முதுநிலை பேரா. **மாலா ஜெயப்பிரகாஷ்** அவர்கள்,
தலைவர், WCSC-திருச்சி மண்டலம்.

முன்னிலை வகிப்பவர்கள் :

திரு.**S.கார்த்திகேயன்** அவர்கள்,
ராது & ராது ஹீரோ ஹோண்டா ஏஜென்சி.

முதுநிலை பேரா.**K.R.சண்முகம்** அவர்கள்,
இணை இயக்குனர், WCSC-VSP.

பேரா.**G.பாலமுருகன்** அவர்கள், ஒருங்கிணைப்பாளர், WCSC-VSP.

**Dr.R.புவனேஸ்வரி தேவராஜன்** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), WCSC-திருச்சி மண்டலம்.

அருள்நிதி.**M.மாணிக்கம்** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP),
பொன்மலைப்பட்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.

6.15 மணி : வாழ்த்துரை : திரு. **கு.மோகன்** B.Com., அவர்கள்,
வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), அந்தநல்லூர்.

6.20 மணி : தலைமையுரை : திரு. **A.மயில்வாகனன்** IPS., அவர்கள்,
காவல்துறை துணை ஆணையர், குற்றம் மற்றும் போக்குவரத்து,
திருச்சி மாநகரம்.

6.30 மணி : திட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை :
திரு.**A.S.துரை ராம்குமார்** B.E., அவர்கள்,
அறங்காவலர், அறிவுத்திருக்கோயில், ஆழியாறு.

6.45 மணி : நன்றியுரை : அருள்நிதி. **S.காளிதாசன்** அவர்கள்,
செயலாளர், WCSC-திருச்சி மண்டலம்.

6.50 மணி : கிராமியக் கலை நிகழ்ச்சி
**அருமைக் கலைக்காரியாலயம்** குழுவினர், திருச்சி.

உலக நல வாழ்த்து

## பழூர் கிராமத்தின் தொடக்க விழா

திரு.S.கார்த்திகேயன் அவர்களின் நிதியுதவியுடன் திருச்சி மண்டலம், பொன்மலைப்பட்டி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை, பழூர் கிராமம் தத்தெடுக்கப்பட்டு, 2018 நவம்பர் 11 ஆம் தேதி, அந்தநல்லூர், வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.கு.மோகன் அவர்கள் தலைமையில், ஆழியார், அறிவுத்திருக்கோயில் அறங்காவலர், திரு.A.S.துரை ராம்குமார் அவர்களால் உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன், மரம் நடுதல் விழாவுடனும் எசனை கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.









மேலும் முக்கிய பிரமுகர்கள், பேராசிரியர்கள், பொதுமக்கள், மண்டல மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# செயல்பாட்டு அறிக்கை

| | | |
|---|---|---|
| கிராமத்தின் பெயர் | : | அ.பழூர் |
| கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | : | 11.11.2018 |
| கிராமிய சேவைத் திட்டம் நிறைவு நாள் | : | 20.04.2019 |
| மண்டலம் | : | திருச்சி |
| அறக்கட்டளை | : | பொன்மலைப்பட்டி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை |
| கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | : | 403 |
| பள்ளியின் பெயர் | : | அரசு உயர்நிலைப் பள்ளி, முத்தரசநல்லூர் |

உடற்பயிற்சி : 229


| | | |
|---|---|---|
| கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்களின் எண்ணிக்கை | : | ஆ:96 பெ:198 மொ:294 |
| காயகல்பம் பயின்றவர்களின் எண்ணிக்கை | : | ஆ:80 பெ:204 மொ:284 |
| தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | : | ஆ:85 பெ:191 மொ:276 |

| | | |
|---|---|---|
| முதல்நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | : | 139 |
| இரண்டாம்நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | : | 115 |
| முன்றாம்நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | : | 105 |
| பிரம்மஞானப் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | : | 58 |
| ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | : | 12 |

<u>உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி</u>








## ஆரம்ப மருத்துவ முகாம்

பழூர் கிராமிய சேவைத் திட்டத்தில் 16.11.2018 மற்றும் 17.11.2018 ஆகிய இரண்டு நாட்கள் ஆழியார் ஆராய்ச்சி மருத்துவ அன்பர்கள் கிராம மக்களிடம் இரத்த மாதிரிகளைச் சேகரித்தனர். இம்முகாமில் மொத்தம் 241 அன்பர்கள் கலந்து கொண்டனர்.




## மறு பரிசோதனை மருத்துவ முகாம்

பழூர் கிராமிய சேவைத் திட்டத்தில் 21.03.2019 அன்று ஆழியார் R&D மூலமாக கிராம மக்களிடம் இரண்டாம் முறை மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மொத்தம் 17 அன்பர்கள் கலந்து கொண்டனர்.

1. **செல்வம் என்ற அன்பருக்கு எடை 57.8 கிலோவிலிருந்து 50.7 கிலோவாக குறைந்துள்ளது. சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 197 லிருந்து 135 ஆக குறைந்துள்ளது.**
2. **வசந்தி என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 133 லிருந்து 119 ஆக குறைந்துள்ளது. சர்க்கரையின் அளவு உணவிற்குபின் 277 லிருந்து 158 ஆக குறைந்துள்ளது.**
3. **பரிதா என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 112 லிருந்து 106 ஆக குறைந்துள்ளது. இரத்த அழுத்தம் 130/80 லிருந்து 120/80 ஆக குறைந்துள்ளது.**
4. **அங்காளபரமேஷ்வரி என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 126 லிருந்து 84 ஆக குறைந்துள்ளது.**
5. **காந்திமதி என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குபின் 169 லிருந்து 118 ஆக குறைந்துள்ளது.**

6. **கனகராஜ் என்ற அன்பருக்கு எடை 52.2 கிலோவிலிருந்து 51.6 கிலோவாக குறைந்துள்ளது. சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 111 லிருந்து 103 ஆக குறைந்துள்ளது. இரத்த அழுத்தம் 150/80 லிருந்து 140/80 ஆக குறைந்துள்ளது.**
7. **பானுமதி என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 133 லிருந்து 121 ஆக குறைந்துள்ளது.**
8. **கஸ்தூரி என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 161 லிருந்து 88 ஆக குறைந்துள்ளது. எடை 46.5 கிலோவிலிருந்து 44.8 கிலோவாக குறைந்துள்ளது.**
9. **இளஞ்சியம் என்ற அன்பருக்கு எடை 48 கிலோவிலிருந்து 47 கிலோவாக குறைந்துள்ளது.**
10. **மீனாம்பாள் என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 320 லிருந்து 171 ஆக குறைந்துள்ளது.**
11. **ஜெயந்தி என்ற அன்பருக்கு சர்க்கரையின் அளவு உணவிற்குமுன் 104 லிருந்து 90 ஆக குறைந்துள்ளது.**
12. **சண்முகம் என்ற அன்பருக்கு இரத்த அழுத்தம் 150/100 லிருந்து 140/100 ஆக குறைந்துள்ளது.**

## மனநல ஆலோசனை முகாம்

03.03.2019 அன்று A/N. M.K. ஜானகிராமன் அவர்களால் **மனநல ஆலோசனை முகாம்** நடத்தப்பட்டது. இந்த முகாமில் கிராமத்தில் மொத்தம் 08 மாணவர்களும், 34 அன்பர்களும் கலந்து கொண்டனர்.

## சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

12.11.2018 அன்று சுற்றுப்புற சுகாதார **விழிப்புணர்வு முகாம்** திரு.ராஜேந்திரன் அவர்களால் நடத்தப்பட்டது. இந்த முகாமில் கிராமத்தில் மொத்தம் 17 அன்பர்கள் கலந்து கொண்டனர். அதில் 200 மரக்கன்றுகள் நடப்பட்டது.

## கர்ப்பிணி பெண்களுக்கான அருட்காப்பு

09.01.2019 அன்று கர்ப்பிணி பெண்களுக்கான அருட்காப்பு வாழ்த்து தவம் நடத்தப்பட்டது. அதில் 11 கர்ப்பிணி பெண்கள் கலந்துகொண்டனர். து.பேரா.புவனேஸ்வரி அவர்கள் வாழ்த்து தவம் நடத்தினார்கள்.

# கிராம மக்களின் அனுபவ உரை

வாழ்க வளமுடன்



From ர. துர்காதேவி
காந்தி நகர் (புதூர்)
முத்தரசநல்லூர்
திருச்சி

எங்கள் ஊருக்கு வேதாத்திரி மகரிஷியின் கிராம சேவா திட்டம் வந்தது. அவர்கள் சொல்லிக் கொடுத்ததின் மூலம், பயிற்சிகள் தொடர்ந்து செய்-ததால் அலர்ஜியின் முத்திரை மூலம் மூலம் என்ற நோய் ஆரம்ப விடமாக இருந்தது. அது இப்போதை இல்லை. புதிதாக திருமணமாகிய எனக்கு அகத்தாய்வு பயிற்சிகள் மூலம் மாமியார் வீட்டில் எல்லோருடனும் அன்பாக நடந்து கொள்கிறேன். இன்னும் முயற்சி செய்கிறேன். இருவரும் பயிற்சியில் இருப்பதால் நான் கோபமாக இருக்கும் போது அவர் அமைதியாக இருப்பார். அவரை பார்த்து நானும் அப்படியே செய்ய முயற்சி எடுக்கிறேன். கோபம் குறைந்துள்ளது.

எங்களுக்கு இதையெல்லாம் கொடுத்த குரு-வுக்கும், கிராமத்துக்கு கொண்டு வந்த எல்லாருடைய உள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

18-04-19 13:15

வாழ்க வையகம்          வாழ்க வளமுடன்



எனது பெயர் அ. முத்துலட்சுமி வயது 32 ஆகும். நான் மதுர் காந்தி நகர் காலனியில் வசித்து வருகிறேன் உலக சமுதாய சேவா சங்கம் நடத்தும் மனவளக் கலை யோகா வகுப்பில் பயிற்சி பெறுகிறேன். நான் ஒரு கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இதனால் உடல் நலம் மற்றும் மனம் மிகவும் சோர்வடைந்து காணப்படும். யோகா வகுப்பில் கற்று தந்த உடற்பயிற்சி மற்றும் தியானப் பயிற்சி செய்வதன் மூலம் மீண்டும் புத்துணர்ச்சி பெறுகிறேன். நான் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்யும் போது எனது ஒரு கண்களில் இருந்து கண்ணீர் வரும். கண் பயிற்சி செய்வதன் மூலம் அந்தப் பிரச்சனை இப்பொழுது எனக்கு இல்லை. நான் எனது சக ஊழியர்களுக்கும் உடற்பயிற்சி மற்றும் சூரிய நமஸ்காரம் பயிற்சி கொடுத்தேன் இதன் மூலம் அவர்களும் பயன் பெறுகிறார்கள்

18-04-19 13:




வாழ்க வளமுடன்

எனது பெயர் E கீதா, எனக்கு 34 வயது ஆகிறது. எனக்கு Morning எழுந்திரிக்கும் பொழுது, கால்களை தரையில் வைக்கும் பொழுது, குதிங்கால் வலியால் அவதிபடுவேன். இ இப்பொழுது இந்த உடற்பயிற்சிகளையும், ஆசனங்களையும், கற்றுகொண்டு அதை தினமும் செய்வதால் வலி இப்பொழுது இல்லை Happy morning ஆக இருக்கு. தியானங்கள் செய்வதால் கோபங்கள், டென்ஷன்கள் குறைந்து உள்ளது. இந்த உடற்பயிற்சியை நான் எனது கணவருக்கும், குழந்தைக்கும் கற்று கொடுக்கிறேன். எனக்கு இதை கற்றுதந்த அம்மாவிற்கும், வேதாத்ரி மகரிசிக்கும், எனது நன்றிகள். வாழ்க வளமுடன்

இப்படிக்கு
E. Geetha

18-04-19 13:15



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

திருச்சி மாவட்டம் A. பழூரில்
வசித்து வரும் பத்மாவதி வயது 59
ஆகிய நான் பலவித உடல் உபாதைகளுடனும்
குறிப்பாக மூல நோயுடனும் இருந்து வந்தேன்.
எனக்கு ஒருநாள் போவது ஒரு வருடம்
போவதைப் போல் உணர்ந்தேன்.

அது சமயம் எனது ஊருக்கு 2018ம் ஆண்டு நவம்பர்
மாதம் கிராமிய சேவை திட்டத்தின் மூலம் வேதாத்திரி
மகரிஷியின் மனவளக்கலை பயிற்சி முகாம் வந்தது. அதில்
நானும் சேர்ந்து உடற்பயிற்சி, காயகல்ப பயிற்சி, தவப்
-பயிற்சி மற்றும் அகத்தாய்வு பயிற்சிகள் செய்தேன்.
இப்பொழுது எனது உடல்நிலை நன்றாக ஆரோக்கியமாக
இருக்கிறது. மேலும் காயகல்ப பயிற்சி (அஸ்வினி முத்திரை)
தொடர்ந்து செய்து வந்ததால் எனக்கு 15 (பதினைந்து)
ஆண்டுகளாக இருந்து வந்த, பலவித சிகிச்சை செய்தும்
(மருந்து, மாத்திரைகள்) குணமாகாத மூல நோய் (4)
நான்கே மாதத்தில் பூரண குணம் பெற்று முழு ஆரோக்
கியத்துடன் இருக்கிறேன்.

மேலும் எனது அக்காவுக்கு தூங்கும் பொழுது
படுக்கையிலேயே சிறுநீர் கழிக்கும் பழக்கம் இருந்து
வந்தது. வயது 69. இரவில் மூன்று முறையாவது சிறுநீர்
கழித்து விடுவார்கள். அவர்களும் தொடர்ந்து அஸ்வினி
முத்திரை மட்டும் செய்து வந்ததில் படுக்கையிலேயே
சிறுநீர் கழிக்கும் பழக்கம் மாறி இரவில் ஒரு முறைமட்டுமே
சிறுநீர் கழிக்க எழுந்து பாத்ரூம் செல்கிறார்கள்.

இந்த கிராம சேவை திட்டத்தின் மூலம் ஊர் மக்களுக்கு
இலவசமாக அனைத்து பயிற்சிகளையும் மேற்கொள்ள
வைக்கும் அனைவரையும் எனது மனமார்ந்த நன்றியை
தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, இப்படிக்கு

# நிறைவு விழா அழைப்பிதழ்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## நிகழ்ச்சி நிரல்

மாலை

5.45 மணி : கொடியேற்றம், ஆரோக்கியமான அமைதி கிராமம் போர்டு திறப்பு

6.00 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

6.15 மணி : வரவேற்புரை : மு.பேரா. **மாலா ஜெயப்பிரகாஷ்** அவர்கள்,
தலைவர், WCSC-திருச்சி மண்டலம்.

6.20 மணி : செயல்பாட்டு உரை : அருள்நிதி. **P. முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

முன்னிலை வகிப்பவர்கள் :

திட்ட நன்கொடையாளர் : அருள்நிதி.**S.கார்த்திகேயன்** அவர்கள்,
ராது & ராது ஹீரோ ஹோண்டா ஏஜென்சி.

முதுநிலை பேரா.**K.R.சண்முகம்** அவர்கள்,
இணை இயக்குனர், WCSC-VSP.

பேரா.**G.பாலமுருகன்** அவர்கள், ஒருங்கிணைப்பாளர், WCSC-VSP.

திரு.**M. மாணிக்கம்** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), பொன்மலைப்பட்டி அறக்கட்டளை.

6.30 மணி : தலைமையுரை : திருமதி.**வீ.நிர்மலா** அவர்கள்,
வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), அந்தநல்லூர்.

6.40 மணி : தலைவரைப் பற்றிய அறிமுகம்

6.45 மணி : திட்டத்தை நிறைவு செய்து சிறப்புரை (காணொலி காட்சி) :
அருள்நிதி.**SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

7.05 மணி : நன்றியுரை : து.பேரா. **R.சேகர்** அவர்கள்,
தலைவர், பொன்மலைப்பட்டி அறக்கட்டளை.

7.10 மணி : **ஒளி, ஒலி படக்காட்சி**

உலக நல வாழ்த்து

**<u>எதிர்காலத் திட்டங்கள்:</u>**

ஆரோக்கியமும் அமைதியும் மிக்க பழூர் கிராமம், பொன்மலைப்பட்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

**<u>வாழ்த்து:</u>**

பழூர கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாறுவதற்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்தி கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM. மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய திரு.S.கார்த்திகேயன் அவர்களுக்கும், இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த திருச்சி மண்டல பொறுப்பாளர்களுக்கும், பொன்மலைப்பட்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக் கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் அருள்நிதி.K.ராஜபாண்டியன், அருள்நிதி.R.செந்தாமரை அவர்களுக்கும், சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவருக்கும், உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத் திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

**உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை**
**உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.**
**உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே**
**உலக சமாதானம் என்ற அமைதி உண்டாம்.**
**- வேதாத்திரி மகரிஷி**

தொண்டாற்றி இன்பம் காண்போம்!

நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
WCSC – VSP இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்